**நாவலபிட்டிய நகர சபை**
**கண்டி மாவட்டம்**

------------------------------------

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

2018 ஆண்டின் நிதிக்கூற்றுக்கள் 2019 மார்ச் 28 திகதி கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் அந் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளரின் பொழிப்பு அறிக்கை மற்றும் விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2019 மே 31 ஆம் திகதியும் தவிசாளரிற்கு அனுப்பப்பட்டது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை பிரிவில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களைத் தவிர்த்து நிதிக்கூற்றுகளின் 2018 திசெம்பர் 31 இல் நாவலபிட்டிய நகர நகர சபையின் நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

#### (அ) கணக்கீட்டுக் குறைபாடுகள

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (i) | சபைக்கு சொந்மில்லாத ரூபா 113,000 பெறுமதியான 2 வாகனங்கள் மூலதனமாக்கப்பட்டிருந்தன. | சரியாக கணக்கீடு செய்ய வேண்டும். | சொத்துக்கள் மூலதனமாக்கப்பட்டிருந்தது என அறிக்கை இடுகிறேன். |
| (ii) | 5 அலுவலக மேசைகளின் பெறுமதி ரூபா 154,475 குறைத்து கணக்கீடு செய்திருந்தது. | சரியாக கணக்கீடு செய்ய வேண்டும். | கணக்காய்வினால் சுட்டிக்காட்டப்பட்ட குறைபாட்டை ஏற்றுக்கொள்கிறேன். |
| (iii) | ரூபா 284,060 பெறுமதியான 2 வருமானங்கள் வருமான செலவு கணக்கிற்கு மற்றும் பெற வேண்டியதாக கணக்கீடு செய்திருக்கவில்லை. | சரியாக கணக்கீடு செய்ய வேண்டும். | இந்த பெறுமதியை வருமான செலவு கணக்கில் குறிப்பிடப்பட்டுள்ளதாக அறிவிக்கிறேன். |
| (iv) | செலுத்த வேண்டிய ரூபா 849,194 ஆன 6 வேலை கடன் கொடுனர் மீதி மற்றும் கூட்டுத் தொகை ரூபா 194,222 ஆன 25 பல்வேறு கடன் கொடுனர் மீதிகளை கணக்கீடு செய்திருக்கவில்லை. | சரியாக கணக்கீடு செய்ய வேண்டும். | திரண்ட நிதியத்தால் செலுத்துவதால் கடன் கொடுனராக கணக்கீடு செய்வதில்லை என அறிவிக்கிறேன். |
| (v) | நிலையான வைப்பு வட்டியை ரூபா 76,664 குறைத்து கணக்கீடு செய்திருந்தது. | சரியாக கணக்கீடு செய்ய வேண்டும். | எதிர்காலத்தில் சரி செய்ய நடவடிக்கை எடுக்கிறேன். |

(ஆ) **இணக்கஞ் செய்யப்படாத கணக்குகள்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| நிதிக் கூற்றுக்களில் காட்டப்படும் கூட்டுத் தொகை ரூபா 8,430,113 ஆன 03 கணக்கு மீதிகள் மற்றும் துணைப்பதிவேட்டில் காட்டப்படும் மீதிகளிடையில் ரூபா 412,699 வித்தியாசம் ஆனது. | தொடர்புடைய மீதிகளின் வித்தியாசத்திற்கான சீராக்கம் செய்யப்பட வேண்டும். | எதிரகாலத்தில் சரி செய்ய நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கிறேன். |

(இ) பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (i) | 05 ஆண்டுகளை விஞ்சிய பெற வேண்டிய கணக்கு மீதி ரூபா 701,821 ஆனது. | பெற வேண்டிய மீதிகளை அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும். | சில கடன்படுனர் பணம் கிடைத்துள்ளதுடன், கிடைக்க வேண்டிய தொகையை அறவிட நடவடிக்கை எடுக்கிறேன் |
| (ii) | செலுத்த வேண்டிய 02 கணக்கு மீதிகளின் பெறுமதி ரூபா 7,523,725 இனை 05 ஆண்டுகளை விஞ்சியிருந்த போதும் தீர்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | செலுத்த வேண்டிய மீதிகளை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் | செலுத்த வேண்டிய பணத்தை எதிர்காலத்தில் செலுத்தி முடிவு செய்கிறேன். |

(ஈ) **கணக்காய்விற்கான எழுத்து மூல சான்றுகளின்மை**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| ரூபா 81,317,448 பெறுமதியான 04 கணக்கு விடயங்கள் தொடர்பாக அட்டவணை மற்றும் மீதி உறுதிபடுத்தல்கள் போன்ற சான்றுகள் சமர்பிக்கப்படாததனால் கணக்காய்வின் போது அவற்றை திருப்திகரமாக ஒப்பாய்வு செய்ய முடியாதிருந்தது. | நிதிக் கூற்றுக்களில் காட்டப்படும் கணக்கு மீதிளை உறுதிப்படுத்தும் சான்றுகள் முன்வைக்கப்பட வேண்டும். | பதிலுடன் அட்டவணை சமர்ப்பிக்கிறேன். |

## 1.4 இணங்காமை

### 1.4.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமை தீர்மானங்களுடன் இணங்காமை

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமை தீர்மானங்களுடனான தொடர்பு | இணங்காமை | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|---|
| (அ) | நகர சபை கட்டளை சட்டத்தின் 157(6)(எ)பிரிவு மற்றும் 2016 ஒக்டோபர் 30 திகதி இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசின் அதி விசேட வர்த்தமாணி | அறிவித்தல் பலகை கட்டணம் ரூபா 320,248 அறவிடப்படவில்லை. | அறிவித்தல் பலகை கட்டணம அறவிட வேண்டும் | எதிர்காலத்தில் அறவிட நடவடிக்கை எடுக்கிறேன். |
| (ஆ) | இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசின் நிதிப்பிரமாணம் 371(இ) | ரூபா 812,031 பெறுமதியான உப கட்டுநிதி தீர்க்கப்படவில்லை. | கட்டுநிதியை தீர்க்க நடவடிக்கை எடுக்க வேண்டும் | ரூபா 609,772 மேலும் அறவிடப்பட வேண்டும் |
| (இ) | 2016 மார்ச் 17 திகதிய இலக்கம் 2016/3 கொண்ட உள்ளூராட்சி ஆணையாளரின் சுற்றறிக்கையில் | | | |
| (i) | 5(1) பிரிவு | வியாபார கட்டிட மதிப்பீட்டு வாடகை 05 ஆண்டுகளுக்கு ஒரு முறை திருத்தப்பட்டிருக்கவில்லை. | சுற்றறிக்கை பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும் | மதிபிட நடவடிக்கை எடுக்கிறேன் |
| (iii) | 10 பந்தி | கடை அறைகள் பல நபர்களுக்கு உப குத்தகை வழங்கக்பட்டிருந்தது. | சுற்றறிக்கை பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும் | உப குத்தகைகாரரை இனங்கண்டு சட்டரீதியாக்க நடவடிக்கை எடுக்கிறேன் |
| (iii) | 12 பந்தி | அங்கீகாரமின்றி சிறப்பங்காடியில் 14 கடையறைகளின் தோற்றம் மாற்றப்பட்டிருந்தன | சுற்றறிக்கை பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும் | விடயம் அவதானிக்கப்பட்டது. அதன் பிரகாரம் சபை அறிக்கையை பரிசீலித்து பின்னர் முன் நடவடிக்கை எடுக்கிறேன் |
| (ஈ) | இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசின் பெறுகைகள் வழிகாட்டி கோவை 2006 | ரூபா 393,908 கொடுப்பனவு தொடர்பாக பெறுகைகள் மற்றும் தொழிநுட்ப குழு தீர்மானம் ஆகவில்லை. | பெறுகைகள் வழிகாட்டிக் கோவையை பின்பற்ற வேண்டும் | தேவையான போது தொழிநுட்ப குழுவை பயன்படுத்தி கொள்வனவு செய்துளளதாக அறிவிக்கிறேன் |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2018 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டுக்கான சபையின் மீண்டுவரும் செலவுகளை விஞ்சிய வருமானம் ரூபா 44,664,940 ஆனதுடன், அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவுகளை விஞ்சிய வருமானம் ரூபா 15,890,776 ஆனது.

### 2.2 வருமான நிருவாகம்

#### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், பில் இடப்பட்ட வருமானம், சேர்க்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆணடு தொடர்பாக முன்வைக்கப்பட்ட மதிப்பிடப்பட்ட வருமானம், பில் இடப்பட்ட வருமானம், சேர்க்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் பின்வருமாறு.

| | | 2018 | | | | 2017 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | **வருமான மூலம்** | **மதிப்பிடப்பட்ட வருமானம்** | **பில் போடப்பட்ட வருமானம்** | **சேர்க்கப்பட்ட வருமானம்** | **திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை** | **மதிப்பிடப்பட்ட வருமானம** | **பில் போடப்பட்ட வருமானம** | **சேர்க்கப்பட்ட வருமானம** | **திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை** |
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| (i) | வீத வரி மற்றும் குத்தகை | 14,313,751 | 13,101,409 | 10,232,626 | 10,101,074 | 14,465,399 | 16,637,619 | 13,191,497 | 12,460,213 |
| (ii) | வாடகை | 23,607,529 | 6,895,236 | 5,697,443 | 2,268,196 | 19,778,798 | 18,316,311 | 17,227,508 | 2,661,611 |
| (iii) | அனுமதிப் பத்திரக் கட்டணம் | 1,960,000 | 1,550,889 | 1,564,889 | (14,000) | 1,573,720 | 1,558,479 | 1,558,479 | - |
| (iv) | ஏனைய வருமானம் | 14,227,280 | 30,274,978 | 13,855,845 | 19,545,294 | 10,486,880 | 12,849,030 | 16,172,072 | 2,680,747 |
| | | 54,108,560 | 51,822,512 | 31,350,803 | 31,900,564 | 46,304,797 | 49,361,439 | 48,149,556 | 17,802,571 |

#### 2.2.2 வருமானம் சேகரித்தளின் செயலாற்றுகை

| **கணக்காய்வு அவதானிப்புக்கள்** | **பரிந்துரை** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** |
|---|---|---|
| மீளாய்வாண்டினுள் சேர்க்கப்பட வேண்டிய மொத்த வருமானம் ரூபா 69,625,083 ஆன போதும், ஆண்டினுள் சேர்க்கப்பட்ட வருமானம் ரூபா 31,350,803 ஆனமையால் வரமானம் சேகரிப்பதன் முன்னேற்றம் 45 சதவீதமானது. | நிலுவை வருமானம் அறவிட வேண்டும். | அவதானிப்பை ஏற்றுக்கொள்கிறேன். |

### 2.2.3 வீத வரி மற்றும் குத்தகை

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 11 அரச நிறுவனங்களில் நிலுவை வித வரி மீதி ரூபா 5,444,083 ஆனது. | நிலுவை வீத வரி அறவிட வேண்டும். | எதிர்காலத்தில் அறவிட நடவடிக்கை எடுக்கிறேன். |

### 2.2.4 ஏனைய வருமானம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 1 - 6 இற்கும் இடைப்பட்ட காலத்திற்குரிய அறவிடப்பட வேண்டிய பசளை விற்பனை வருமானம் ரூபா 878,955 ஆனது. | இத் தொகையை காலத்திற்கேற்ப தீர்திக்கொள்ள வேண்டும். | CECB நிருவனத்தில் அறவிட வேண்டியுள்ள சிறப்பங்காடி நிரமானம் தொடர்பான கொடுப்பனவிற்கு பதிலிட இணங்கியுள்ளது. |

### 2.2.5 நீதிமன்ற தண்டப ்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| பெறவேண்டிய நீதிமன்ற தண்டப்பணம் ரூபா 393,383 மற்றும் முத்திரைக் கட்டணம் ரூபா 6,500,000 தொகை ஆனது. | குறித்த பணத்தை அழைப்பித்துக் கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும். | நீதிமன்ற தண்டப்பணம் ரூபா 446,886 மற்றும் முத்திரைக் கட்டணம் ரூபா 5,696,010 கிடைத்துள்ளது. |

## 3 செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றுகை

நகர சபை கட்டளைச் சட்டத்தின் 04 பந்தியின் கீழ் பொது மக்கள் சுகாதாரம், பொதுப் பயன்பாட்டு சேவைகள் மற்றும் பொதுப் பாதைகள் தொடர்பான விடயங்களை ஒழுங்குபடுத்தலும் கட்டுப்படுத்தலும், மக்கள் நலன், இலகு மற்றும் நலன்புரிச் சேவைகள் போன்ற சபையினால் மேற்கொள்ள வேண்டிய செயற்பாடுகளை நிறைவேற்றுவது தொடர்பாக வெளிப்படுத்தப்பட்ட விடயங்கள் பின்வருமாறு.

#### (அ) துணைச் சட்டம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| நகர சபை கட்டளை சட்டத்தின் 157 பிரிவின் கீழ் 15 பிரதான விடயங்களை செய்வதற்காக துணைச் சட்டம் விதிக்கபட வேண்டிய போதும் 03 விடயங்களிற்கு மாத்திரம் துணைச்சட்டம் விதிக்கப்பட்டிருந்தது. | சபைக்கு வருமானத்தை ஈட்டிக் கொள்ளக் கூடிய துணைச் சட்டத்தை விதித்து வருமானம் ஈட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும். | 10 துணைச் சட்டங்களின் 7 மீளாய்விற்காக உள்ளூராச்சி திணைக்களத்திற்கு அனுப்பப்பட்டுள்ளது. |

(ஆ) **எதிர்பார்த்த வெளியீட்டு மட்டத்தை பெற்றுக் கொள்ளாமை**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| இம்புல்பிட்டிய ஔடத பூங்காவிற்காக ரூபா 100,000 செலுத்தி வலை வேலியொன்று இடப்பட்ட போதும் ஔடத கன்றுகள் நாட்டப்படவில்லை. | சொத்தக்களின் எதிர்பார்த்த வெளியீட்டு மட்டத்தை பெற்றுக் கொள்ள வேண்டும். | ஔடத பூங்காவை தயாரிப்பதற்கு எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கிறேன். |

(இ) எதிர்பார்த்த நலன்கள் (outcome) பெற்றுக் கொள்ளாமை

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| சிறப்பங்காடி கட்டிடத்தொகுதியின் 15 கடையறைகள் மற்றும் 5 இல்லங்கள் மூடப்பட்டிருந்துடன் வருமானம் ஈட்டப்பட்டிருக்கவில்லை. | சபைக்கு சொந்தமான சொத்துக்கள் பயன்படுத்தி வருமானம் ஈட்டப்பட வேண்டும். | 02 இல்லங்கள் முத்திரை இடப்பட்டுள்ளதுடன், டென்டர் இடப்பட்ட போதும் எவரும் முன்வரவில்லை. 03 அறைகளை பெறுனர்களின் கோரிக்கைக்கு வழங்கப்பட்டுள்ளதாக அறிவிக்கிறேன். |

(ஈ) **கழிவுப் பொருள் முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| நகர சபையில் தினந்தோறும் ஒன்று சேறும் 08 அளவான குப்பைகளிலிருந்து உக்களடையும் கழிவுகளை பயன்படுத்தி தயாரிக்கும் பசளை குப்பை மத்திய நிலையத்தில் குவிக்கப்பட்டிருந்தது. பசளை கொள்வனவு செய்ய நகர சபை ஓர் நிருவனத்துடன் ஒப்பந்தம் கைச்சாத்திட்ட போதும், அந் நிருவனம் இக் கருத்திட்டத்தை கைவிட்டுச சென்றிருந்ததுடன், ரூபா 664,090 தொகையொன்று அறவிட வேண்டி நிலவியது. உக்களடையாத குப்பைகள் மத்திய நிலையத்தில் சுற்றாடலுக்கு பாதிப்பேற்படும் வகையில் குவிக்கப்பட்டு தீ மூட்டப்பட்டிருந்தது. | நிலுவை அறவிட வேண்டியதுடன், உக்களயா கழிவுகளை முறையாக வெளியிட வேண்டும். | பயோ சிஸ்டம் நிருவனத்துடன் நிலுவை அறவிட ஒப்பந்தம் கைச்சாத்திட்டு இக் கருத்திட்டத்தை மீண்டும் ஆரம்பிப்பதாக அறிவிக்கிறேன். |

(உ) **நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| சபையினால் நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள் இலக்குகளை இனங்கண்டு அவற்றை அடைந்து கொள்ள மற்றும் முன்னேற்றத்தை அளவிடுவதற்கான அளவுகோள்களை இனங்கண்டிக்கவில்லை. | நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை இனங்கண்டு அவற்றை அடைந்து கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும். | எதிரகாலத்தில் நடைமுறைபடுத்த நடவடிக்கை எடுக்கிறேன். |

3.2 **முகாமைத்துவ வினைத்திறமையின்மை**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | சிறப்பங்காடி கட்டிடத்தொகுதியின் 4 கடையறைகள் ரூபா 6,750,000 யிற்கு விற்கப்பட்டிருந்தன. | கடையறை உப குத்தகைக்கு வழங்கள் தொடர்பாக பரிசீலனை செய்த தீர்மானம் எடுக்க வேண்டும். | கடையறை உப குத்தகைக்கு வழங்கள் நகர சபையினால் கட்டுப்படுத்த முடியவில்லை. உப குத்தகை காரரை இனங்கண்டு சட்டரீதியான நடவடிக்கை எடுக்கிறேன். |
| (ஆ) | சிறப்பங்காடி கட்டிடத்தொகுதியின் 9 கடையறைகள் மூடப்பட்டிருந்ததுடன், ரூபா 458,355 வாடகை தொகையொன்று அறவிட வேண்டி இருந்தது. 6 கடையறைகள் முத்திரையிடப்பட்டிருந்ததுடன் அதன் காரணமாக சபைக்கு பெற வேண்டிய வருமானமொன்று இழக்கப்பட்டிருந்தது. | சிறப்பங்காடி கட்டிடத்தொகுதியின் கடையறைகள் திறந்து வைக்க வேண்டியதுடன் அறவிட வேண்டிய வருமானம் அறவிட வேண்டும். | முத்திரையிடப்பட்ட கடையறைகள் இரண்டு சந்தர்ப்பங்களில் டென்டர் செய்ய நடவடிக்கை எடுத்த போதும் எந்தவொறு கொள்வனையாளரும் முன் வரவில்லை என அறிவிக்கிறேன் |
| (இ) | நகர சபைக்கு சொந்தமான 2 இல்லங்கள் ஒப்பநதங்கள் இன்றி 2010 குத்தகைக்கு வழங்கியிருந்த போதும் ரூபா 2,200,000 ஆன ஒரே தடவை செலுத்தும் பணம் அரவிடப்படாததனால் 2016 ஆகஸ்ட் முத்திரையிடப்பட்டிருந்ததுடன் மீண்டும் குத்தகைக்கு வழங்க நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | டென்டர் வழங்கி வருமானம் ஈட்டுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | டென்டர் வழங்க நடவடிக்கை எடுத்த போதும் எந்தவொறு கொள்வனவாளரும் முன் வரவில்லை என அறிவிக்கிறேன் |

3.3 **மனித வள முகாமைத்துவம்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | 01 ஊழியர் மிகை மற்றும் 16 ஊழியர் வெற்றிடங்கள் ஆனது. | குறித்த வெற்றிடங்கள் நிரப்ப நடவடிக்கை எடுக்க வேண்டும். | ஊழியர்கள் ஆட்சேர்க நடவடிக்கை எடுக்கிறேன். |
| (ஆ) | சேவையை விட்டுச் சென்ற, இடமாற்றம் பெற்ற மற்றும் ஓய்வு பெற்ற 33 உத்தியோகத்தர்களிடமிருந்து ரூபா 785,879 கடன் அறவிட நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | ஊழியர் கடன் அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும். | எதிர்காலத்தில் சரி செய்ய நடவடிக்கை எடுக்கிறேன். |

3.4 **செயற்பாட்டு வினைத்திறமையின்மை**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | சிறப்பங்காடி கட்டிடத்தொகுதியின் கடையறைகளில் மதிப்பீடு நடைமுறைபடுத்தாததனால் ரூபா 12,360,940 ஆன வாடகை வருமானமொன்று அறவிடப்பட்டிருக்கவில்லை. | புதிய மதிப்பீட்டை நடைமுறை செய்து கடை வாடகை அறவிட வேண்டும். | புதிய மதிப்பீட்டிற்கு கடையறை உறிமையாளர்களின் எதிர்பை முன் வைத்துள்ளனர். மதிப்பீட்டு திணைக்களத்திடம் கடையறை வாடகையை திருத்துமாறு கோரப்பட்டுள்ளது. |
| (ஆ) | டென்டர் நடைமுறை மற்றும் நகர சபை கட்டளை சட்ட ஏற்பாடுகளை கவனிக்காது சிற்ப்பங்காடியில் இலக்கம் 173 சிறிய கூடத்தை நீணட காலத்திற்கு குத்தகை வழங்கியிருந்ததுடன், ஒப்பந்தத்தின் 05 பந்தி பிரகாரம் பிணை காப்பு, முக்கிய பணம் ரூபா 500,000 அறவிடப்படாது இருந்ததுடன், புதிய மதிப்பீட்டை நடைமுறைப்படுத்தாததால் ரூபா 120,000 வருமானமொன்று இழக்கப்பட்டிருந்தது. | முக்கிய பணம் அறவிடல் மற்றும் புதிய மதிப்பீட்டின் படி வாடகை அறவிடப்பட வேண்டும். | குறித்த பதிவேட்டுப் பரிசீலகையின் போது ரூபா 500,000 செலுத்தியில்லாமை உறுதியாகிறது. இது தொடரபில் அறிவிக்கப்பட்ட போதும் கொடுப்பனவு செய்யப்படவில்லை. சட்ட பிரிவினால் கிடைக்கும் ஆலோசனைப்படி முன் நடவடிக்கை எடுக்கிறேன். |
| (இ) | 2008 ஆண்டின் வீத வரி மதிப்பீட்டின் மீது 2018 ஆண்டு வரையம் வீத வரி அறவிடப்பட்டிருந்தது. | காலத்திறகேற்ப வித வரி மதிப்பிடப்பட்டு வருமானம் அறவிட வேண்டும். | வீத வரி பதிவேடுகள் நாளாதுவரை ஆக்குவதாகவும் அதன் பின்னர் மதிப்பீட்டை பெற்றுக் கொள்வதாகவும் அறிவிக்கிறேன். |

3.5 **பெறுகைகள்**

**பெறுகைகள் திட்டம்**

| **கணக்காய்வு அவதானிப்புக்கள்** | **பரிந்துரை** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** |
| --- | --- | --- |
| பெறுகைகள் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | பெறுகைகள் திட்டமொன்று தயாரிக்க வேண்டும். | 2019 ஆண்டு முதல் பெறுகைகள் திட்டமொன்று தயாரிக்கப்பட்டுள்ளது. |

4. **கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்**

**பாதீட்டுக் கட்டுப்பாடு**

| | **கணக்காய்வு அவதானிப்புக்கள்** | **பரிந்துரை** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** |
| --- | --- | --- | --- |
| (அ) | 32 செலவு விடயங்களிற்காக வழங்கப்பட்ட ரூபா 3,941,100 ஆன ஒதுக்கீட்டிலிருந்து எவ்வித செலவும் மேற்கொள்ளப்படாமல் மொத்த ஒதுக்கீடும் எஞ்சியிருந்தது. | நடைமுறை சாத்தியமான பாதீடு தயாரிக்க வேண்டும். | ஏற்றுக்கொள்கிறேன். |
| (ஆ) | 3 வருமான விடயங்களில் மதிப்பிடப்பட்டிருந்த ரூபா 510,000 ஆன வருமானத்திளிருந்து எவ்வித உழைப்பும் மேற்கொள்ளப்படவில்லை. | நடைமுறை சாத்தியமான பாதீடு தயாரிக்க வேண்டும். | ஏற்றுக்கொள்கிறேன் |